# நிலவியல் நோக்கில் பேரூர்ப்புராணம்

***சு. விக்னேசு***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை

***முனைவர் கா. திருநாவுக்கரசு***
தமிழ்த்துறைத்தலைவர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை
https://doi.org/10.5281/zenodo.14383230

***ஆய்வுச்சுருக்கம்***
*தலபுராணங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று பொருண்மைகள் பாடப்பெறுகின்றன. இவற்றுள் மூர்த்தி என்பது இறைவனையும், தலம் என்பது அவ்விறைவன் குடிகொண்ட நிலத்தையும், தீர்த்தம் என்பது அந்நிலங்களுள் இருக்கும் நீர்நிலைகளையும் குறிக்கும். தலம், தீர்த்தம் இரண்டும் நிலவியல் நோக்குடையனவாகவும், மூர்த்தி பண்பாட்டுத் தொடர்பு உடையதாகவும் தோற்றமளிக்கின்றன. தலபுராணங்கள், தமிழ்த் திணைக்கோட்பாட்டினைப் பின்பற்றி, நாட்டுப் படலம், நகரப்படலம், தீர்த்தப்படலம் ஆகியவற்றில் நில அமைப்பைப் பதிவு செய்கின்றன. அவ்வரிசையில் பேரூர்ப்புராணத்தின் நாட்டுப் படலம், நகரப்படலம், தீர்த்தப்படலம் முதலியன, முறையே கொங்குநாட்டு நிலவியல் அமைப்பையும், பேரூரின் நகரமைப்பையும், நீர்வளத்தினையும் எடுத்துரைக்கின்றன. ஆதலால் தலபுராணங்கள் என்பவை நிலவியலைத் தனித்த முறையில் கற்பனை நயங்களுடன் கூறுவன என்ற கருத்தை மெய்ப்பிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*
***குறிச்சொற்கள்:*** *நிலவியல், பேரூர்ப்புராணம், தலபுராணம், வட்டார இலக்கியம், பண்பாடு, கொங்குநாட்டு நில அமைப்பு.*

## முன்னுரை

*தமிழிலக்கிய, இலக்கணப்பின்புலத்தினை, நிலவியல் கோட்பாடு கொண்டு அணுகிய ஆய்வுகளாக, பண்பாட்டு நிலவியலும் தமிழ் நாவல் வாசிப்பும் (அ.ராமசாமி, மார்ச்24, 2015,* Blogger.com), *பண்பாட்டு நிலவியலும் திணைக் கோட்பாடும் (மே7, 2019,* wordpress.com) *எனும் இணையதளக் கட்டுரைகளும், கரிசல் சிறுகதைகளில் நிலவியல் பண்பாடு (ஜோ. ஹெலன், மனோன்மணியம் சுந்தரனார் பலகலைக்கழகம், திருநெல்வேலி, 2019) எனும் தலைப்பிலமைந்த முனைவர் பட்ட ஆய்வேடும் முன்னோடிகளாக அமைகின்றன. இவ்வாய்வு வரிசையில் தலபுராணங்களை நிலவியல் நோக்கோடு ஆய்வு செய்வது தேவையான ஒன்றாகிறது. சூழலியல் மாற்றங்களில் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய இயல்புகளையும், சிறப்புகளையும், பண்பாட்டையும் தல புராண இலக்கியங்கள் வாயிலாக அறிய முடியும். தலபுராணங்கள் நூற்றாண்டு கடந்த பழைமை உடையவை. அவற்றில் பாடப்பட்டுள்ள நாட்டுப்படலம், நகரப்படலம், தீர்த்தப்படலம் ஆகியவற்றை நிலவியல் கூறுகளுடன் ஒப்புநோக்கி ஆராய்வதன் வழி அந்தந்தத் தலத்திற்குரிய/ ஊருக்குரிய தனித்தன்மைகளை அறிய இயலும்.*

## நிலவியல் குறித்த புரிதல்

*நிலவியல் எனும் கோட்பாட்டை நிலத்தினது இயல்பைப் படிப்பது எனப் பொதுவாக*

*விளங்கிக் கொள்ளலாம். இதனை* Geography *என அழைப்பர். இச்சொல் சமூக அறிவியலின் ஒரு பகுதியான புவியியல் என்ற துறையையும் குறிக்கிறது. புவியியல் என்பது அறிவியல அடிப்படையில் பூமியின் தோற்றம், அமைப்பு, தன்மை ஆதியவற்றை விளக்குகிறது. புவி எனப்படும் இவ்வுலகின் அமைப்பை, 'நிலம் நீர் தீ வளி விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்பார் தொல்காப்பியர் (மரபியல்-88). இவ்வைம்பூதச் சேர்க்கையில் வரும் உலகினில், நிலத்தையும் அதைச் சார்ந்த மக்களின் வாழ்வியல், பண்பாட்டுச்சூழல் ஆகியவற்றை இனம்காட்டும் துறையாகவும் நிலவியல் எனும் கோட்பாடு அமைகிறது. இது சமூகவியலோடும் சூழலியலோடும் தொடர்புடைய துறையாகும்.*

*புவியியல் மொத்த உலகின் இயல்பை பற்றியது. நிலவியல் என்பது பூமியில் உள்ள ஒவ்வொரு நிலப்பரப்பின் இயல்புகளையும் பார்வைக்குக் கொண்டுவருவதாகும். இந்நிலவியல், அறிவியல் சார்ந்தும் பண்பாடு சார்ந்தும், 'இயற்பியல் நிலவியல்* (Physical Geography), *எனவும், பண்பாட்டு நிலவியல் எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இலக்கிய திறனாய்வின் பகுதியாக மாறியுள்ளது. அம்மாற்றமே பண்பாட்டு நிலவியல் அணுகுமுறை என வடிவம் கொண்டுள்ளது (இரசவாதம்,2019).*

## நிலவியலும் தமிழிலக்கண மரபுகளும்

*மொழி இயற்கை சார்ந்தது. அதன் இயக்கத்தில், கருத்துப் பரிமாற்றத்தில் மொழி பேசும் மக்களைச் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளும், மக்கள் வாழும் நிலப்பகுதியின் தன்மைகளும் பதிவாகின்றன.*

***வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்***
***தமிழ்கூறு நல்லுலகத்து***
***எழுத்தும் சொல்லும் பொருளும்***

***(தொல்.,பாயிரம்:1-4)***

*எனவரும் தொல்காப்பியப் பாயிரம் தமிழிலக்கணம் நிலவியலுக்கு உட்பட்டது என்பதைக் காட்டுகிறது. செய்யுளின் பொருண்மையான அகப்பொருட் செய்யுட்களின் பகுப்பான முதற்பொருளில் முதலாவதாக நிலம் குறிக்கப்படுகிறது (அகம்.,4). அந்நிலங்களின் பகுப்பினையும் இயற்கை சார்ந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பூப்பெயர்களால் சுட்டுவது தமிழிலக்கணத்தின் சிறப்பையும் சீர்மையையும் காட்டுகிறது. இப்பூக்கள் அந்தந்த நிலம் சார்ந்த பூக்கள் என்பது தமிழிலக்கண மரபு நிலவியலைச் சார்ந்த பண்பாடுடையது என்பதைக் காட்டும் தனிப்பெரும் சான்றாகும். தொல்காப்பியர்,*

***வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்***
***நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்***
***யாப்பின் வழியது என்மனார் புலவர்.***

***(தொல்.செய்யுளியல்-78)***

*எனச் செய்யுள் வகைகளைக் குறிப்பதும் நிலவியலை அடியொற்றிய வரையறையாகவே நமக்குப் புலப்படுகிறது.*

## கருப்பொருளில் நிலவியல் பண்பாடு

*மனிதனின் வாழ்வும், பண்பாடும் நிலம், பொழுது எனும் இரண்டின் அடிப்படையில், ஊர்தோறும், மாநிலம்தோறும், நாடுதோறும் மாறுபடுகிறது. அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவைகள் முதலியன கருப்பொருளாக அமையும் எனக் கூறுமிடத்தில், தொல்காப்பியர் சுட்டும், செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ அவ்வகை பிறவும் (அகம்.,20) எனவரும் அடிகள் சிந்தித்தற்குரியன. முதற்பொருளடிப்படையில் அமைந்த கருப் பொருட்களும் நிலத்துக்கு நிலம் மாறுபாடு அடையக்கூடியன. மனிதனின் பண்பாடும் கலைகளும் அவனது தொழில்சார்ந்து தோன்றிப் பின்பற்றப்படுபவை என்பதையும் அவை இடந்தோறும் வேறுபடுபவை என்பதையும் இச்சூத்திரம் பெறவைக்கிறது.*

*நிலம் எனப்படும் மண் அதனோடு உறவு கொள்ளும்பிற உயிருள்ள உயிரற்றனவற்றின் உறவால் தனக்கான தகவமைவை ஏற்படுத்துகிறது. மண்ணுக்கும் நீருக்கும் உள்ள உறவு, மண்ணுக்கும் காற்றுக்கும் உள்ள உறவு, மண்ணுக்கும் வெப்பத்திற்கும் உள்ள உறவு*

*என்பதோடு அல்லாமல் மண்ணுக்கும் மரம், விலங்குகள், என்று பல உயிரினங்களுக்கும் உள்ள உறவுகள் வளர்ந்து வளர்ந்து ஒரு கெழுமைப்பாடு(*complexity *ஏற்பட்டுவிடுகிறது. இதனால் அந்தந்த நிலத்திற்கேற்ற தனித்தன்மை உருவாகிறது. அதன் பயனாக ஒழுகலாறுகளிலும் தனித்தன்மை வந்துவிடுகிறது (பாமயன், 2019:20,21) என்ற கருத்தின் துணைகொண்டு திணைக்கோட்பாட்டைப் பார்க்கும்போது, நிலவியல் கோட்பாடு, முதற்பொருள், கருப்பொருள் மட்டுமன்றி உரிப்பொருளுக்கும் பின்புலமாக அமைவதை அறியமுடிகிறது.*

**புராணங்களும் திணைப் பாடுமுறையும்**

*தமிழிலக்கியங்களில் நிலத்தையும் இயற்கைச் சூழலையும் பாடும் அல்லது படைத்துக் காட்டும் மரபு சங்க இலக்கியக் காலந்தொட்டுக் கால் கொண்டிருந்தது. அதன் நீட்சியாகவே காப்பியப் பண்பில் தலைவனது நாடு, வளம் முதலியவற்றை வருணித்துப் பாடுதல் வேண்டும் என்பது இலக்கண வரையறையாக அமைந்தது. இதனை,*

**மலை கடல் நாடு வளநகர்ப் பருவம்**

***இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து***

***(தண்டி.,-7)***

*எனவரும் நூற்பாவால் அறியலாகிறது. காப்பியங்களின் இப்பகுதி சங்கச் செய்யுள் மரபின் கருப்பொருட் கூறுகளை ஒட்டியதாகும். இக்காப்பிய இலக்கணத்தை அடியொற்றித் தமிழ்ப் புலமை மரபில் சிந்தாமணி தொடங்கித் தலபுராணங்கள் வரையிலும் ஐந்திணைக் கோட்பாட்டின் அடிப்படையில், ஒரு நாட்டின் நிலப்பகுதியை ஐந்து திணைகளுக்கும் உரியதாகப் படைத்துக் காட்டுவதை வழக்கமாகக் கொண்டனர். தமிழின் முதல் தலபுராணமாகக் கருதப்படும் கோயிற்புராணத்தில் நாட்டுச் சருக்கமும் நகரச்சருக்கமும் பாடப்படவில்லை. அடுத்தடுத்துத் தோன்றிய புராணங்களில் இம்மரபு விருத்தக் காப்பியங்களில் அமைந்துள்ளது போலவே பின்பற்றப்பட்டுள்ளது.*

*வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகச் சொல்லப்படும் விநாயகபுராணம் தொண்டை நாட்டு வளத்தையும், சென்னை நகர வளத்தையும் முறையே நாட்டுப்படலம், நகரப் படலங்களில் பாடுகிறது. தலபுராண வகைமைக்குள் வராத விநாயக புராணம் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், திணைமயக்கம் என்ற வரிசையில் ஐந்திணைப் பாகுபாடுகளைக் காட்டியுள்ளது. இதுபோல, கந்தபுராணம்*

***தொண்டைநன் னாட்டணி சொல்லி னாமினித்***
***தண்டமிழ் வளநகர்த் தன்மை கூறுவாம்.***

***(நாட்டுப் படலம் 57)***

*எனத்தொடங்கிக் காஞ்சி நகரத்தினைப் பாடுகிறது. விநாயக வழிபாடு இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இருப்பதால், கச்சியப்பர், தான் இருந்த, தனக்குப் பிடித்த விநாயகர் கோயில் இருந்த சென்னை நகரத்தையும், அந்த நகரம் அமைந்த தொண்டை நாட்டையும் பாடினார். முருகப்பெருமான் தமிழ்க்கடவுளாகப் போற்றப்படுபவர். அவர் புராணத்தைப் பாடத் தொடங்கிய கச்சியப்ப சிவாச்சாரியார், தமிழ் நாட்டைப் பாடாது, தான் வாழ்ந்த இடமான தொண்டை நாட்டையும், காஞ்சி நகரத்தையும் நாட்டு, நகரப் படலங்களில் படைத்துள்ளார். இத்தகைய பாடுமுறைகள், நிலப்பாகுபாட்டை வளப்படுத்தியும், வகைப்படுத்தியும் பாட வேண்டும் என்ற இலக்கியக் கொள்கை தமிழில் ஆழமாக வேரூன்றி இருந்ததைப் புலப்படுத்துகிறது. மேலும், தலபுராணங்களில் நாட்டுப்படலம், நகரப்படலம் என்பவை இறைவன் உறைகின்ற தலத்தைப்பாடுவதாகவும், இறைவனைப் பாடும் புராணங்களில் வரும் நாட்டு, நகரப் படலங்கள், புலவர் நூலைப் பாடிய இடத்தைப் பாடுவதாகவும் அமைவதைக் காணமுடிகிறது.*

*மேலும், மக்கள் தங்கள் தலத்தின்பால் (இருப்பிடம்) பற்றுவைக்கத் தலபுராணங்கள் ஊக்கமளித்தன (இரா. பாலசுப்பிரமணியன், 2003: 59) என்னும் கருத்து, மக்களுக்குத் தனது சொந்த ஊரின் சிறப்பினைச் கூறுவதாகத் தலபுராணங்கள் எழுந்துள்ளதைக் காட்டுகிறது.*

**வட்டார இலக்கியங்களும் தலபுராணங்களும்**

*வட்டார இலக்கியம் என்ற சொல்லாடலுக்கும் தலபுராணம் என்னும் சொல்லாடலுக்கும் பெரிய வேற்றுமை இல்லை. தலம் என்பதை விட வட்டாரம் என்பது அளவில் பெரியது. படைப்பு முறையிலும் பாடுபொருளிலும் தலபுராணங்களும், வட்டார இலக்கியங்களும் வேறுபடுவன. வட்டார இலக்கியங்கள் சென்ற நூற்றாண்டில் எழத் தொடங்கின. எழுத்தாளர்களது கண்முன் நிகழ்ந்தனவும் கதைகள் வழிக் கேட்டனவும் கதைகள், கவிதைகளாக வட்டார இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கும். ஆனால், ஒருவட்டாரத்தின்நிலஅமைப்பையும், ஒரு தலத்தின் நில அமைப்பையும் இவ்விரண்டு இலக்கியங்களும் பதிவுசெய்யாமல் இருப்பதில்லை.*

*தலபுராணங்கள், ஒரு ஊர் அல்லது நாட்டின் வளங்களையும், சிறப்புகளையும் கற்பனை கலந்த புராணப் புனைவுகளுடன் இறைவனை முதன்மைப்படுத்திப் பாடுகின்றன. இக்காலத்து வட்டார இலக்கியங்கள் குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் மக்களையும், வாழ்வியல் சிக்கல்களையும் பேசுவதாக அமைகிறது. இவ்விரண்டும் இலக்கிய வரலாற்றில் நிலவியல் பதிவின் தொடர்ச்சி எனக்கொள்ளுதல் பொருந்தும்.*

*நிலத்தின் இயல்பினைப் பொது, சிறப்பு என இரண்டாகப் பகுக்கலாம். பொது இயல் என்பது பூமி முழுமைக்கும் பொருந்தும். சிறப்பு என்பது பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் மண்வளம், நீர்வளம், தட்ப வெப்பம் முதலியன மாறுபடுவதைக் காட்டுவது. தலபுராணங்களில் பாடப்படும் நாட்டுப் படலம், நகரப்படலம், தலவிசேடப் படலம், தீர்த்தப்படலம் முதலியன, அந்தந்தத் தலத்தின் சிறப்பான நிலவியல் கூறுகளைச் சுட்டுகின்றன.*

**பேரூர்ப்புராணம்**

*பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய அருளாளர் கச்சியப்பமுனிவர். தொண்டை நாட்டினர். சிவஞான முனிவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். இவர் தணிகைப்புராணம், திருவானைக்காப் புராணம், பூவாளூர்ப் புராணம், விநாயக புராணம், காஞ்சிப்புராண இரண்டாம் காண்டம், பேரூர்ப் புராணம் ஆகிய ஆறு புராணங்களையும் தூது, ஆற்றுப்படை, அந்தாதி முதலிய சிற்றிலக்கிய வகைகளையும் இயற்றியுள்ளார். இவர் பாடிய பேரூர்ப்புராணம் 2220 பாடல்களையும் 36 படலங்களையும் கொண்டது கொங்குநாட்டுத் தலங்களுள் தேவார வைப்புத் தலமான பேரூரின் சிறப்புகளைப் பாடுவது.*

**கொங்குநாட்டு நில அமைப்பு**

*கடற்பகுதி நெய்தல் நிலம். தாழை மலர் நெய்தல் நிலத்திற்குரியதாகப் பேசப்படுவது. இவை குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்று திணைகளால் வளம் நிறைந்த கொங்கு மண்டலத்தில் இல்லை. இதனைப் பேரூர்ப்புராணம்,*

***இலவிதழி பாகன் இழிந்தமலர்க் கைதை***
***கலவியது காரமிழ்து கான்றதொழி யாத***
***புலவுடைய தென்றுகடல் போக்கிநில மூன்றிற்***
***குலவிவள மெத்தியது கொங்குவள நாடு.***

*(பா.எ.-5)*

*என்ற பாடலில் புராணத் தொன்மங்களுடன் இணைத்துச் சொல்வதைக் காணமுடிகிறது. மேலும் தேன் நிறைந்து இனிமை பொருந்திய கொங்குநாடு, கடலை உவர்ப்பென நீக்கியது என்பதனை,*

***கடலுவர்ப்பென நீக்கிய காமர் இந் நாட்டின்***
***தடவு வண்மை***

*(பா.எ.-6)*

*எனவரும் உயர்வு நவிற்சியால் நாட்டுப்படலப் பாடல் புகழ்ந்து செல்கிறது. நெய்தல் நிலப்பகுதி கொங்கு எல்லைக்குள் இல்லை. அதனால் பாடவில்லை. பாலைத்திணை ஏன் பாடப் படவில்லை என்பது ஐயத்திற்குரியது. பாலைத் திணை நிலையான நிலப்பரப்பைக் கொண்டதில்லை. அது பருவப் பொய்ப்பினால் தோன்றுவது. அவ்வாறான பருவமாற்றங்கள் கொங்கு நாட்டில் ஆசிரியர் காலத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது இறையருளால் பருவம் பொய்க்காமல் கொங்குநாடு செழித்திருக்கும் என்ற எண்ணத்தாலும் பாடாமல் விடுத்திருக்கலாம்.*

**நிலம் சார்ந்த பெயரீடுகள்**

*மருதமரங்கள் மிகுதியாக இருந்தமையால் குறிஞ்சி நிலமாகிய மலைக்கு மருத மலை என்று பெயரமைந்ததை,*

***மருதம் வண்டு மலர்ப்பொ தும்பரின்***
***மருதம் பாட வாய்ந்த வேள்வரை***
***மருத நின்ற மறுவில் காட்சியான்***
***மருத ஓங்கல் என்ன மன்னுமே***

***(அபயப்படலம்-18)***

*என்ற பாடல் விளக்குகிறது. தொல்காப்பியம் பெயரியலில் திணையாலும் நிலத்தாலும் பெயரமைவதைக் காட்டுகிறது. இறைவன் அந்த மலையில் எழுந்தருளியுள்ளதால் அவர் மருதமலையான் எனப் போற்றப்படுகிறார். பேரூரில்அரசமரங்கள்நிறைந்திருந்தமையால் அரச வனம் என்ற பெயர் பெற்றதையும் தலவிசேடப் படலம் கூறுகிறது (பா.எ.- 8). பேரூரில் நொய்யலாற்றங்கரையில் உள்ள ஒரு இடத்தில் மண் வெண்மை நிறத்தில் இருக்கிறது. இதனைப் புராணம் திருநீற்று மேடு, பூதி மேடு எனவும், முற்காலத்தில் பிரம்மன் இங்கு வேள்வி நடத்திய குண்டத்தின் சாம்பல் எனவும், அம்மண்ணைப் பூசுபவர்கள் பிரம்ம ராட்சசம் (பேய் பிடித்தல்) நீங்குமென்றும் திருநீற்று மேட்டுப் படலத்தில் கூறுகிறது.*

*ஊருக்கும், அங்குள்ள இறைவனுக்கும் நிலம் சார்ந்த பெயர்கள் அமைவதைத் தலபுராணச் செய்திகளின் வாயிலாக அறிய முடிகிறது,*

**நகரமைப்புகள்**

*நிலவியல், மனிதன் ஏற்படுத்திக் கொண்ட இல்லங்களையும், இல்லங்கள் சூழ்ந்த நகரமைப்பையும் ‘‘வெளி’’ எனக் குறிக்கிறது. இதனை, நிலவியலில் மனித வாழிடங்கள் வெளிகள் எனவும், அவற்றின் தன்மையைப்பொறுத்து, நிரந்தர வெளிகள்* (Permanent Space) *எனவும், தற்காலிக வெளிகள்* (Temporary Space) *(இரசவாதம், 2019) எனவும் வகைப்படுகின்றன’’ எனும் கருத்தால் அறியமுடிகிறது. மேலும், ‘‘நகர உருவாக்கம் என்பது நிலவியல் சார்ந்த ஒன்றாகும். குறிப்பாக ஒரு நகரத்தின் ஆயுளையும் மக்களின் எண்ணங்களையும் தீர்மானிக்கும் காரணிகளுள் முதன்மை இடத்தைப் பெறுவது நிலவியலாகும். நிலவியலின் தகவமைப்புதான் நகர உறுதிப் பாட்டினைத் தீர்மானிக்கிறது’’ (ஜெ.ஆர். சிவராம கிருஷ்ணன், 2023:17) எனவரும் கூற்று நகரமைப்பில் நிலவியலின் இன்றியமையாமையைக் காட்டுகிறது.*

*பேரூரின் நகரமைப்பை, புடைநகர், இடை நகர், உள்நகர் என மூன்றாக் கச்சியப்பர் படைத்துக் காட்டுகிறார். உள்நகர் அகழியும், மதிலையும் உடையதாகவும் கூறுகிறார் (நகரப் படலம்,பா.எ-33). அகழி, மதிலை அடுத்துப் பரத்தையர் வீதியும், அடுத்துக் கடைவீதியும் நகரப்படலத்தில் காட்டப்பெறுகின்றன.*

*திருக்கோயிலின் மதிலைச் சுற்றியும் புறத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் வீதிகளும் அவற்றுக்கு வெளியே தூய்மையில்லாதவர் வசிக்கும் வீதிகள் இருந்ததையும் அறிய முடிகிறது (பா.எ-63).*

*இந்நகரப் படலத்தை ஆராயும்போது பண்பாடு, நிலவெளிகளால் வளர்த்தெடுக்கப் படுகிறது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு தூரம் உண்மையானது நிலவெளிகள் (வாழிடங்கள்) பண்பாடுகளால் உருவாக்கப்படுகிறது என்பதும் (இரசவாதம், 2019) என்ற பேராசிரியர் கார்ல் சாசரின் கூற்று தலபுராணங்களின் நகரப்படலச் செய்திகளின் வழி உறுதிப்படுகிறது.*

**நீர்நிலைகள்**

*தலபுராணங்களில் இடம்பெறும் தீர்த்தம் எனும் சொல் நிலவியல் நோக்கில் நீர் நிலைகளைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் செழுமைக்கும் வளமைக்கும் அடிப்படையாவது நீர்நிலைகள். அவற்றின் சிறப்பியல்புகளைப் பேசுவதாகத் தீர்த்தப்படலம் எனும் பகுப்பு, புராணங்களில் வைக்கப்படுகின்றன.*

*கொங்குநாட்டின் மருதத் திணையைச் செழிக்கவைக்கும் நீராதரங்களாக, பவானி, காவிரி, ஆம்பிராவதி (தற்போதைய அமராவதி) காஞ்சி நதி எனப்படும் நொய்யல் ஆகியவற்றைப்*

பேரூர்ப்புராண நாட்டுப்படலம் (பா. எ.- 36) காட்டுகிறது. இவற்றுள் காவிரி குடகு மலையில் உருவாகிக் கொங்குநாட்டினை நோக்கி ஓடிவந்ததன் காரணம் கொங்கு நாட்டு அழகினைக் காண்பதற்கு எனவும் (பா.எ.-74) கூறுவது நயமுடைத்தாய் அமைகிறது.

பேரூர்ப்புராணத் தீர்த்தப்படலம், காஞ்சிநதி, காலவ தீர்த்தம், பிரம தீர்த்தம், சக்கர தீர்த்தம், தேவ தீர்த்தம்,சூரியதீர்த்தம், கந்த தீர்த்தம், கன்னிகை தீர்த்தம், இந்திர தீர்த்தம், முசுகுந்த தீர்த்தம், சோழதீர்த்தம், அங்கிர தீர்த்தம், துர்க்கை தீர்த்தம், அகத்திய தீர்த்தம், காளிதீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் பேரூரில் இருப்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது (பா.எ.2-4). இத்தீர்த்தங்களின் தனித்தன்மைகளை விளக்குவதாகப் படலம் அமைகிறது. சிலவற்றை இருப்பிடங்களைச் சுட்டிக்கூறுகிறது. அவை அனைத்தும் இன்று மக்கள் பயன்பாட்டில் இருக்கின்றனவா? என்பதும், முதலில் உயிர்ப்புடன் இருக்கின்றனவா? என்பதும் ஆராய வேண்டியதாகும்.

பட்டிப்பெருமானுக்கு வடக்குத் திசையில் நச்சுத்தீர்த்தம் இருப்பதாகவும், அதைக் குடிப்பவர்கள் முத்தி நிலை அடைவர் எனவும், செம்புப் பொருட்களைக் களிம்பு நீக்கி ஒளிவிடச் செய்யும் எனவும் கச்சியப்பர் கூறியுள்ளார் (பா.எ.-45). பேரூரில் நச்சுப்பொய்கை இருந்ததாகவும், அது வெளிவந்தால் மக்கள் இறப்பர் எனவும் கருதி பட்டி விநாயகர் அப்பொய்கையின் கண்ணை அடைத்து அதன்மேல் அமர்ந்துள்ளார் என்பது மக்களின் நம்பிக்கை சார்ந்து கூறப்பட்டு வரும் கருத்தாகும். செம்புக்காசுகளைப் பொன் போல் ஒளிவீசச் செய்யும் நிகழ்வை, 1918 இல் தாம் நேரில் கண்டதாகச் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் பதிவு செய்துள்ளார் (1930: திடிடிடி). ஆனால் பேரூர்ப்புராணம் இத்தீர்த்தத்தை நச்சுப் பொய்கை எனக் குறிப்பதும், சிவக்கவிமணியார் அதனைப் பிரமதீர்த்தம் எனக்குறிப்பதும் முரணாக உள்ளது. இப்பிரமதீர்த்தமும் கோவிலுக்கு வடபுறத்தில் இருப்பது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நிலவியல் சார் விழாக்கள்

விழாக்கள் நிலம் சார்ந்த பண்பாட்டை உடையது. உழவுத்தொழிலால் செம்மையுறுவது கொங்கு நாடு. இதனைக் கொங்கத்து உழவு என்ற இளம்பூரணர் உரைச் சான்றாலும் அறியலாம் (தொல்.419,உரை). அத்தகைய உழவின் மேன்மையை உயர்வுறச் சொல்லும் பொருட்டே இறைவனும், இறைவியும் நாற்று நட்டதைப் பாடுவதாகப் பள்ளுப்படலம் அமைகிறது. இப்படல வரலாற்றை அடியொற்றிப் பேரூரில் ஆனி மாதத்தில் நாற்று நடவுத் திருவிழா நடைபெறுகிறது.

## முடிபுகள்

''ஒரு இலக்கியத்தைப் படைக்கும் முன்பு அவ்விலக்கியம் பாடப்படும் நிலவியல் சூழலைப் பதிவுசெய்வதாகத் தமிழில் நாட்டுப்படலமும், நகரப்படலமும் இயற்றப்படுகின்றன. இவ்வழக்கு தொல்காப்பியம் காட்டும் முதற்பொருள், கருப்பொருள் அடிப்படையில் பிற்கால இலக்கணங்களில் காப்பிய மரபாகப் பேணப் பெற்றுப் புராணங்களில் கால்கொண்டது.

நிலம், திணை காரணமாக ஊர்களுக்கும், மக்களுக்கும், இறைவனுக்கும் சூட்டப்படும் பெயர்கள் அமைகின்றன.

நாட்டுப்படலம் இயற்கையான நிலவியலையும், நகரப்படலம் அந்நிலவியல் சார்ந்து மக்கள் உருவாக்கிக் கொண்ட நிலவெளிகளையும் காட்டுவதாகப் படைக்கப்பட்டுள்ளன.

ஒரு நிலத்தில் உள்ள சிறப்புகளைப் புராணங்கள் தலச்சிறப்புகள் எனக் கூறுகின்றது. புராணத்தின் கற்பனைப் புனைவுகளை, எண்ணி இன்புறுதற்கும், அப்புனைவுகளில் படைக்கப் பட்டிருக்கும் உண்மைகளை, வாழ்விற்கும் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

இந்த வகையில் நோக்கும் போது ஒவ்வொரு புராணமும் அந்தந்தப் பகுதிகளுக்குரிய நிலவியல் வரலாறாகவே தென்படுகின்றன.

**மேற்கோள் நூல்கள்**

1. ஆறுமுகப்பிள்ளை. வை. (பதி.) - கந்தபுராணம், சைவப்பிரகாச யந்திர சாலை, யாழ்ப்பாணம், 1883.
2. இளம்பூரணர் (உரை.) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, பதிப்பு - 1958.
3. இராமசாமிக் கவுண்டர். பெ., வேலப்ப கவுண்டர். நா., (பதி.) - திருப்பேரூர்ப் புராணம் சுருக்க வசனம், சாது அச்சுக் கூடம், சென்னை, பதிப்பு - 1930.
4. கச்சியப்ப முனிவர். - பேரூர்ப்புராணம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1969.
5. கச்சியப்ப முனிவர். - விநாயக புராணம், கணேச அச்சியந்திர சாலை, சென்னை, 1910.
6. சிவராமகிருஷ்ணன். ஜெ. ஆர்., - நிலவியல் நோக்கில் கங்கை கொண்ட சோழபுரம், தமிழ்மரபு அறக்கட்டளை, பன்னாட்டு அமைப்பு, பதிப்பு - 2023.
7. பாலசுந்தரம். ச., (உரை.) - தொல்காப்பியம் (தொகுதி-1, பகுதி-1) பொருளதிகாரம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம், பதிப்பு - 2012.
8. பாலசுந்தரம். ச., (உரை.) - தொல்காப்பியம் (தொகுதி-3, பகுதி-3) பொருளதிகாரம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம், பதிப்பு - 2012.
9. பாலசுப்பிரமணியன். இரா. - புராணவியல், தமிழ் சக்தி வெளியீடு, காரைக்குடி, பதிப்பு - 2003.
10. பாமயன் - திணையியல் கோட்பாடு, தடாகம் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2019.
11. ராமசாமி. அ., - பண்பாட்டு நிலவியலும் தமிழ் நாவல் வாசிப்பும், Blogger.com, ©õºa 24, 2015. (https://ramasamywritings.blogspot.com/2015/03/blog&post24.html)
12. பண்பாட்டு நிலவியலும் திணைக் கோட்பாடும், wordpress.com, ÷©7,2019. (https://nowshadonline.wordpress.